## சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 13.1.2011 அன்று சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசும்போது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – மக்கள் நல பணியாளர்களுக்கு கிராம ஊராட்சியில் ஊதியம் வழங்குவதை மாற்றி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மூலம் ஊதியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ5) துறை

அரசாணை (நிலை) எண்.16 நாள் : 07.02.2011

படிக்கப்பட்டவை.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் ந.க.எண்.65371/09/இ1, நாள் 05.1.2011.

-----

**ஆணை:**

அரசாணை (நிலை) எண். 234, நிதி (ஊ.கு) துறை, நாள் 01.06.2009ல் மக்கள் நலப் பணியாளர்களுக்கு 01.06.2009 முதல் சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.2500–5000 + ரூ.500/– தர ஊதியம் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசுக் கடிதம் எண். 18148/இ5/09–3, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 17.9.2009ல் மக்கள் நலப் பணியாளர்களுக்குரிய ஊதியம் 2515 00 Other Rural Development Programmes – 001 Direction and Administration -1 – Non Plan – AT Block Headquarters – Village Panchayats எனும் கணக்குத் தலைப்பிலிருந்து வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களால் நேரிடையாக பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி கணக்கு எண். 1–ல் வரவு வைக்கப்பட வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர் மேற்படி கணக்கிலிருந்து, மக்கள் நலப் பணியாளருக்கு ஊதியம் வழங்க வேண்டும் என்றும் அறிவுரை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுப்பியுள்ள கருத்துருவில், தமிழ்நாடு மக்கள் நலப் பணியாளர் சங்கம் அளித்த கோரிக்கை மனுவில் ஊராட்சிகளில் பணியாற்றிவரும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள் மூலமாக ஊதியம் பெறுவதில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக தெரிவித்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மூலம் ஊதியம் பெற ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளதால் மக்கள் நலப் பணியாளர்களுக்குரிய மாதாந்திர ஊதியம் உரிய காலத்தில் கிடைத்திட ஏதுவாக, மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பிலிருந்து நேரிடையாக தொகையை கருவூலம் மூலம் பெற்று மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மூலமாக வட்டார அலுவலகத்திலேயே மாதாந்திர ஊதியம் வழங்க உரிய ஆணைகள் பிறப்பிக்க அரசைக் கோரியுள்ளார்.

3. 13.01.2011 அன்று சட்டமன்ற பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசும்பொழுது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பு செய்துள்ளார்:

> "மக்கள் நலப் பணியாளர்கள் ஒவ்வொரு மாதமும், ஊதியத்தினை ஊராட்சித் தலைவர் மூலமாக பெறுவது மிகவும் சிரமமாகவுள்ளது என்றும் இதில் பல்வேறு பிரச்சனைகள் பணியாளர்களுக்கு ஏற்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ள கோரிக்கையை கருத்தில் கொண்டு, மக்கள் நலப் பணியாளர்களுக்குரிய மாதாந்திர ஊதியம் உரிய காலத்தில் கிடைத்திட ஏதுவாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களால் மேற்படி கணக்குத் தலைப்பிலிருந்து, நேரடியாக சம்பளத் தொகையை கருவூலம் மூலம் பெற்று மக்கள் நலப் பணியாளர்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலேயே மாதாந்திர ஊதியம் வழங்க உரிய ஆணையை அரசு பிறப்பிக்கும்''

4. மேற்கூறிய நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவை ஏற்று மக்கள் நலப் பணியாளர்களுக்குரிய மாதாந்திர ஊதியம் உரிய காலத்தில் கிடைப்பதற்கு ஏதுவாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களால் "2515 00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் - I - திட்டத்தில் சேராதது – AT வட்டார தலைமையிடங்கள் – கிராம ஊராட்சிகள்" (த.தொகு.2515–00–001–AT–0004) என்ற கணக்குத் தலைப்பிலிருந்து நேரிடையாக சம்பளத் தொகையை கருவூலம் மூலம் பெற்று மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலேயே வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மூலமாக 2011–2012ம் நிதியாண்டிலிருந்து மாதாந்திர ஊதியம் வழங்க அனுமதி அளிக்கலாமென முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 39/JS(PM)/2011-1, நாள் 07.02.2011–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்:**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதிகணக்கு துறை, சென்னை–108.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35/6.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை சென்னை–15.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள் / மாவட்ட கருவூல அலுவலர்கள்.
**நகல்:**
நிதி (ஊரக வளர்ச்சித்) துறை, சென்னை–9.
நிதி (கருவூலக் கணக்கு-III) துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து பிரிவுகள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்